Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.17/2021 Date:02.07.2026
Deposition of witness for prosecution: PW6 ( LW5 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சிவசங்கர் | Village | கோட்டூர் |
| Father/ Husband Name | சிவா | Taluk | உத்தமபாளையம் |
| Age | 25 /2026 | Calling | பெயிண்டர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.07.2026 TIME 02.15 **PM**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கோட்டூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.11.2020-ம் தேதி மாலை 06.45 மணியளவில் சின்னமனூர்- கோட்டூருக்கு நானும், முத்துகருப்பன் என்பவரும் முத்துகருப்பனின் இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் அமர்ந்து செல்ல அவர் ஓட்டினார். எங்களுக்கு எதிர்திசையில் வந்த TVS Victer வாகனம் நாங்கள் இடது புறமாக சென்று கொண்டிருந்த இடத்திற்கு வந்து, எங்களது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. அதில் எனக்கு வலது காலில் இரத்த காயமும், முத்துகருப்பனுக்கு இடது கண்ணின் அருகே வெட்டுக்காயம் ஏற்பட்டது. நான் மயக்கம் அடைந்துவிட்டேன். எதிர்திசையில் வந்த TVS Victer வாகனத்தில் வந்த நபர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் எங்களது இருசக்கர வாகனத்தில் மெதுவாக சென்றோம் என்றாலும் எதிர்திசையில் வந்த இருசக்கர வாகனம் வேகமாக வந்து எங்களது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் எனக்கும், எதிரிக்கும் காயம் ஏற்பட்டது என்றாலும் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.